## ஏ. முடிவுரைகள் மற்றும் பரிந்துரைகள்

60. இலங்கை ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் என்பவற்றை அண்மித்திருக்கும் நிலையில், 2022 ஆம் ஆண்டில் எதிர்ப்புத் தெரிவித்த இலங்கையர்களின் அனைத்துத்தரப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்த பிரிவினரால் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலை மாறுகால மாற்றங்களுக்கென தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு அதற்கு கிடைத்திருக்கின்றது. தேர்தல் காலத்திற்கு முன்னரும், தேர்தலின் போதும், தேர்தல்களின் பின்னரும் கருத்துச் சுதந்திரம், அமைப்புகளில் இணையும் சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமைகளை முழுமையாக பாதுகாத்து, அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பினை அரசாங்கம் கொண்டுள்ளது. போராட்டக்காரர்களுக்கு எதிராக அனாவசியமான அல்லது மிதமிஞ்சிய அளவிலான பலவந்தத்தை பிரயோகிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளல், சமய, பாலின அல்லது ஏனைய விடயங்களின் அடிப்படையில் பிரிவினைவாத இயல்பிலான மற்றும் பாரபட்ச இயல்பிலான சொல்லாடல்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை தடுத்து, கையாள்வதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளல், மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்ட மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை தடுத்தல் என்பவற்றையும் அது உள்ளடக்குகின்றது.

61. பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் சுமை என்பன குறிப்பாக வறியவர்கள் மற்றும் ஏனைய பலவீன நிலைமைகளுடன் வாழ்ந்து வருபவர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்து இலங்கையர்கள் மீதெடுத்து வந்திருக்கும் ஆழமான தாக்கங்களை உயர் ஆணையாளர் அறிந்து வைத்துள்ளார். தற்போதைய உலகளாவிய பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேச நிதிக் கட்டமைப்பு என்பன காரணமாக இலங்கை மற்றும் ஏனைய பல வளர்முக நாடுகள் தொடர்பாக இப்பொருளாதார அழுத்தம் தீவிரமடைந்துள்ளது. பொருளாதார கொள்கை மற்றும் அரசிறை உறுதிப்பாடு என்பன தொடர்பான முடிவுகள் போதிய அளவிலான சமூகப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளினால் நெறிப்படுத்தப்படுதல் வேண்டுமென அவர் வலிந்து கேட்டுக்கொள்கிறார். இலங்கை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை சாதித்துக் கொள்வதற்குத் தேவையான அரசிறை வெளியை இலங்கையின் வெளிக் கடன் தருனர்கள் வழங்க வேண்டியிருப்பதுடன், பின்பற்றப்படும் சிக்கன வழிமுறைகள் தனது மனித உரிமைகள் கடப்பாடுகளை நிறைவு செய்து வைப்பதற்கான இலங்கையின் ஆற்றலை பலவீனப்படுத்தாதிருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

62. அறிக்கையிடும் காலப்பிரிவின் போது அவதானிக்கப்பட்ட எழுச்சியடைந்து வரும் போக்குகள் ஆழமான கரிசனைக்குரியனவையாகும். அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன: புதிய அடக்குமுறைச் சட்டங்கள் எடுத்துக் காட்டுவதைப் போல அடிப்படை சுதந்திரங்களுக்கான மதிப்பு தொடர்ந்தும் குறைவடைந்து வருதல், ஜனநாயகப் பரீட்சிப்புக்கள் மற்றும் சமநிலைகள் என்பன இல்லாமல் போதல், பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு எதிரான அச்சுறுத்தல், பயமுறுத்தல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் கடந்த காலத்தில் இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமைகள் மீறல்கள் மீண்டும் எழுச்சி அடைதல்.

Advance unedited version

63. பாதிக்கப்பட்டவரின் துன்பங்களைத் திட்டவட்டமான விதத்தில் அங்கீகரித்தல், பாரதூரமான உரிமைகள் மீறல்களை நிகழ்த்தியதில் இராணுவம் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினரின் வகிப்பங்கினை ஏற்றுக் கொள்ளல், கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் நிகழ்த்தப்பட்டிருக்கும் அத்துமீறல்களைக் கவனத்திலெடுத்தல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசு தோல்வி கண்டிருக்கிறது. அது சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பன எதிர்கொண்டுவரும் மிக முக்கியமான ஓர் இடையூறாக இருந்து வருகின்றது. பல கட்டமைப்புகளுடன் இணைந்த விதத்தில் பாரிய குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக நம்பகமான விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் அரச இயந்திரத்தின் ஒரு சில உறுப்பினர்களும் இன்னமும் இருந்து வருகிறார்கள். இது பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் மீறல்களைத் தொடர்ந்து தக்க வைத்தல் என்பவற்றின் அடிப்படையில் அர்த்தபூர்வமான முன்னேற்றம் ஏற்படுவதனை தடுத்து வருகின்றது. 51 வது மனித உரிமைகள் பேரவை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனை விலக்குரிமையின் விளைவாக ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தோன்றியிருந்ததுடன், அது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களிப்பு செய்திருந்தது. அந்நெருக்கடி 2022 இல் பொதுமக்கள் போராட்டங்களைத் தூண்டியது.

64. தேர்தல்களையடுத்து புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி - ஓர் அவசர விடயமாக - இலங்கை நாட்டுக்கென அனைவரையும் அரவணைக்கும் ஒரு தேசிய நோக்கினை முன்னெடுத்தல் வேண்டும். அந்நோக்கு முரண்பாட்டுக்கான மூல காரணங்களைக் கவனத்திலெடுத்து, ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

65. பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும், எதிர்கால மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றை தடுப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் அவசியமாக இருந்து வருகின்றன. இது கணிசமான அளவிலான பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை அமுல் செய்வதனையும் உள்ளடக்குகின்றது. அச்சீர்த்திருத்தங்கள் பாரதூரமான துஷ்பிரயோகங்களில் சம்பந்தப்பட்டிருப்பவர்களை நீக்குவதற்கென வடிகட்டும் செயன்முறை ஒன்றை மேற்கொள்வதனையும், மனித உரிமைகள் தர நியமங்களுடன் கண்டிப்பான விதத்தில் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டு மற்றும் நீதித்துறை சட்டகம் ஒன்றை ஸ்தாபித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும். நாட்டின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் பொருட்டு அரசாங்கம் தேவையான அரசியல் யாப்பு, சட்ட மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும். மேலும், பாரதூரமான துஷ்பிரயோகங்கள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதற்கும், ஜனநாயக மற்றும் அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கும் இத்தகைய சீர்த்திருத்தங்கள் அவசியமாகும். மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் (**OHCHR)** இப்பாதையில் இலங்கைக்கு உதவுவதற்கு தொடர்ந்தும் தயார் நிலையில் இருந்து வருகின்றது.

66. மனித உரிமைகள் பேரவை மற்றும் தனிப்பட்ட ஐ நா உறுப்பு அரசுகள் என்பன இலங்கைக்கு ஆதரவளிப்பதன் மூலமும், மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் 46/1 மற்றும் 51/1 என்பவற்றின் கீழ் பொறுப்புக் கூறலுடன் சம்பந்தப்பட்ட பணிகளை முன்னெடுப்பதற்கான மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தின்

Advance unedited version

பலப்படுத்தப்பட்ட ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், அர்த்தபூர்வமான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் என்பவற்றை நாட்டில் மேற்கொள்வதற்குத் தேவையான நிலைமைகள் மற்றும் அரசியல் விருப்பு என்பவற்றை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலமும் இலங்கையில் பொறுப்புக் கூறல் தொடர்பாக நிலவி வரும் இடைவெளிகளை நிரப்புவதற்கு தொடர்ந்து செயல்படுதல் வேண்டும்.

67. அரசாங்கத்துக்கான பின்வரும் பரிந்துரைகள், உயர் ஆணையாளரின் முன்னைய அறிக்கைகளில்[1] உள்ளடக்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் மீது கட்டி எழுப்பப்பட்டுள்ளன:

(a) பாரபட்சம் காட்டாமை மற்றும் அனைவருக்குமான மனித உரிமைகளின் பாதுகாப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான அனைவரையும் அரவணைக்கும், பன்முக நோக்கொன்றை முனைப்பாக மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் ஆகியோருக்கு எதிரான பாரபட்சம், வெறுப்பு மற்றும் வன்முறை என்பவற்றைத் தூண்டக்கூடிய சமய செயற்பாட்டாளர்களின் பேச்சு மற்றும் செயல் என்பவற்றைத் தடுத்தல் மற்றும் கண்டித்தல் என்பவற்றையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்;

(b) அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கு ஊடாக அரசியல் பங்கேற்புக்கான உரிமையை உத்தரவாதப்படுத்துதல்;

(c) இராணுவம் தன்வசம் வைத்திருக்கும் காணிகளை விடுவித்தல், வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் புதிய காணி கையகப்படுத்தல்களை நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து தடுப்புக் காவல் கைதிகளையும் விடுவித்தல், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான நினைவேந்தல் முன்முயற்சிகளை மேற்கொள்வதனை குற்றச்செயல் பட்டியலிலிருந்து நீக்கி, அவற்றுக்கு ஆதரவளித்தல் போன்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளை அமுல் செய்வதன் மூலம் நிலைமாறு கால நீதிக்கான இயலுமையை வழங்கும் ஒரு சூழலை உருவாக்குதல்;

(d) அரசாங்கத்தின் உயர் பதவிகள், பாதுகாப்புத் துறை அல்லது ராஜதந்திர பதவிகள் என்பவற்றிலிருந்து வரும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான நம்பகமான விதத்தில் கருதப்படும் நபர்களை அதிகாரத்திலிருந்து நீக்குதல் மற்றும் அத்தகையவர்களை நியமனம் செய்தல் அல்லது பதவி உயர்வு அளித்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல். அதேபோல நிலைமாறு கால நீதி மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றைச் சாதித்துக் கொள்வதற்கென ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து அத்தகைய நபர்களை நீக்குதல்;

(e) *பயங்கரவாத தடைச் சட்டம்* தொடர்பாக உடனடியாக ஒரு தற்காலிகத் தடையை விதித்தல் மற்றும் அதற்குப் பதிலாக எடுத்து வரப்படும் எந்த ஒரு சட்டவாக்கமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துடன் பொருந்திச் செல்வதனையும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டவாக்கம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்

[1] A/HRC/46/20, ge;jp 60 kw;Wk; A/HRC/49/9, ge;jpfs; 67–69, A/HRC/51/5, ge;jpfs; 70–72; A/HRC/54/20, ge;jp 64

Advance unedited version

நிபுணா்களினால் முன்னா் விதித்துரைக்கப்பட்டிருக்கும் அளவு கோல்களுடன் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்துதல்;[2]

(f) இது *நிகா்நிலை காப்புச் சட்டம்*, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டம் (***ICCPR***), அரசு சாரா அமைப்புக்கள் தொடா்பான வரைவு மசோதா மற்றும் தொலைத் தொடா்புகள் சட்டத்துக்கான உத்தேச திருத்தம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், அமைப்புகளில் இணைதல் மற்றும் அமைதியாக ஒன்று கூடுதல் என்பவற்றுக்கான சுதந்திரத்திற்கான உரிமைகளை நியாயமற்ற விதத்தில் கட்டுப்படுத்தும் தற்போதைய சட்டங்களை அல்லது உத்தேசச் சட்டங்களை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல்;

(g) தன்னிச்சையான கைதுகள், சட்ட நடைமுறைக்கு வெளியிலான கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் ஏனைய மனித உரிமைகள் மீறல்கள் என்பன தடை செய்யப்பட்டுள்ளன என்றும், அவற்றுக்கெதிராக முறையான விதத்தில் புலன் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனை வழங்கப்படும் என்றும் இராணுவம், புலனாய்வுத் துறை மற்றும் பொலிஸ் படை என்பவற்றின் அனைத்துக் கிளைகளுக்கும் ஐயப்பாட்டிற்கு இடமற்ற விதத்தில் பகிரங்கமான அறிவுறுத்தல்களை வெளியிடுதல்;

(h) சம்பந்தப்பட்ட தகவல்களை மதிப்பிடுவதற்கும், சுயாதீனமான விதத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடா்பான முடிவுகளை மேற்கொள்வதற்குமென ஓா் அவசர விடயம் என்ற முறையில் சட்டமா அதிபரின் கருமங்களுக்கு புறம்பான விதத்தில் சுயாதீனமான வழக்குத் தொடுக்கும் அதிகாரச் சபை ஒன்றை ஸ்தாபித்தல். முன்னைய தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் சா்வதேச மனிதநேயச் சட்ட மீறல்கள் என்பன தொடா்பான வழக்குகளும் இதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்;

(i) சட்டத்தை அமுல் செய்தல், வா்த்தக மற்றும் சிவில் விவகாரங்கள் என்பவற்றில் இராணுவத்தின் ஈடுபாட்டைத் தவிா்த்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் பிரசன்னத்தைக் கணிசமான அளவில் குறைத்தல்;

(j) மனித உரிமைகள் பாதுகாவலா்கள், இதழியலாளர்கள், மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டவா்கள், அவர்களுடைய குடும்பத்தினா் மற்றும் குறிப்பாக பெண்கள் ஆகியோா் தொடா்பான அனைத்து வடிவங்களிலுமான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் என்பவற்றையும், அவா்களுக்கு எதிரான பழிவாங்கல் செயல்களையும் உடனடியாக நிறுத்துமாறு அனைத்து பாதுகாப்பு முகவரகங்களுக்கும், புலனாய்வுத் துறைகளுக்கும் கட்டளையிடுதல்;

[2] OLLKA,7/2021.



Advance unedited version

(k) சிக்கன வழிமுறைகள் பிரதிகூலமான நிலையில் இருந்து வரும் மற்றும் விளிம்பு நிலையிலிருந்து வரும் தனி நபர்கள் மற்றும் குழுக்கள் ஆகிய தரப்புக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீதெடுத்து வரும் தாக்கத்தை மதிப்பிட்டுத் தணித்தல்; பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேசச் சமவாயத்தின் கீழான அந்த உரிமைகளின் அடிப்படை அம்சத்தை - குறிப்பாக, அத்தனிபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பாக - பாதுகாத்துக் கொள்வதற்கு பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளல்;

(l) மனித உரிமைகளை அனுபவிக்கும் விடயத்தில் ஊழல் எடுத்து வந்திருக்கும் எதிர்மறையான தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணைந்த விதத்திலான ஊழல் எதிர்ப்பு வழிமுறைகள் பின்பற்றப்படுவதனை உத்தரவாதப்படுத்துதல்;

(m) சமூக பாதுகாப்பு வழிமுறைகள் பிரதிகூலமான நிலையிலிருந்து வரும் மற்றும் விளிம்பு நிலையிலிருந்து வரும் தனிநபர்கள், குழுக்கள் ஆகியோரைச் சென்றடைவதனை உத்தரவாதப்படுத்துதல்; சமூக பாதுகாப்புக்கான அரசிறை ஒதுக்கினை அதிகரிப்பதனையும் இது உள்ளடக்கும்;

(n) காணித்தகராறுகள் தொடர்பான வெளிப்படையான, கலந்தாலோசனையுடன் கூடிய, பக்கச்சார்பற்ற, பாரபட்சமற்ற வழிமுறைகளின் மூலம் நடுத்தீர்ப்பு செய்தல் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்களை உருவாக்குவது தொடர்பாக சமயங்களுக்கிடையிலான உரையாடலை உறுதிப்படுத்துதல்;

(o) "யுக்திய" செயற்பாடுகளை நிறுத்துதல் மற்றும் இந்த செயற்பாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து நபர்களையும் விடுதலை செய்தல்; போதைப் பொருட்களில் தங்கியிருக்கும் ஆட்களுக்கு சமூக அடிப்படையிலான சிகிச்சை, புனர்வாழ்வளிப்பு என்பவற்றை வழங்கி, தீங்குகளைக் குறைக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆதரவளித்தல்; மனித உரிமைகள் மற்றும் போதைப் பொருள் கொள்கை[3] தொடர்பான சர்வதேச வழிகாட்டுதல்களுக்கு இணங்கிய விதத்தில் மனித உரிமைகள் மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றை மையமாகக் கொண்ட போதைப்பொருள் கொள்கை ஒன்றை அபிவிருத்தி செய்து, அமுல் செய்தல்; மற்றும்

(p) வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைத்து ஆட்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 31 கீழ் தொடர்பாடல்களை பெற்று, பரிசீலனை செய்வதற்கான வலிந்து காணாமலாக்கப்படுதல் தொடர்பான கமிட்டியின் தகைமையை அங்கீகரித்தல் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோமன் சட்டவாக்கத்தை ஏற்றுக் கொள்ளல்.

[3] https://www.undp.org/publications/international-guidelines-human-rights-and-drug-policy#.



Advance unedited version

68. மனித உரிமைகள் பேரவை மற்றும் உறுப்பு அரசுகள் என்பன பொருத்தமான விதத்தில் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென உயர் ஆணையாளர் பரிந்துரை செய்கிறார்:

(a) இலங்கையில் அனைத்துத் தரப்புகளினாலும் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் சர்வதேச குற்றச் செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், வழக்குத் தொடுப்பதற்குமென தேசிய நியாயாதிக்கங்களுக்கு ஊடாக நீதித் துறை நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்; பிராந்தியத்திற்கு வெளியிலான அல்லது அகிலம் தழுவிய நியாயாதிக்கம் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளின் கீழ் சம்பந்தப்பட்ட சர்வதேச வலையமைப்புக்கள் மற்றும் பரஸ்பர சட்ட உதவி செயன்முறைகள் என்பவற்றுக்கூடாக இவற்றை மேற்கொள்வதனையும் இது உள்ளடக்கும். மேலும், உயிர் தப்பியவர்கள், குடும்பத்தினர் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்;

(b) இலங்கையில் பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதற்கென ஏனைய சர்வதேச சட்டத் தெரிவுகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளல்;

(c) பரந்த வீச்சிலான பொறுப்புக் கூறல் வழிமுறைகள் மற்றும் சர்வதேச சட்டத்துடன் இணங்கிச் செல்லும் வழிமுறைகள் என்பவற்றின் ஒரு பாகமாக, பாரதூரமான சர்வதேச மனித உரிமை மீறல் சம்பவங்களை நிகழ்த்தியிருப்பதாக அல்லது மிக மோசமான மனித நேயச் சட்ட மீறல்களை நிகழ்த்தியிருப்பதாக நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்படும் தனிநபர்களுக்கெதிராகச் சொத்துக்களை முடக்குதல் மற்றும் பயணத் தடைகள் போன்ற இலக்கு வைக்கப்பட்ட தண்டனைகளைப் பரிசீலனைக்கு எடுத்தல்;

(d) பழிவாங்குதல்களை எதிர்கொண்டு வருபவர்களைப் பாதுகாப்பதற்கென இலங்கை பிரஜைகள் தொடர்பான பஞ்ச கோரிக்கை வழிமுறைகளை மீளாய்வு செய்தல்; சித்திரவதை அல்லது ஏனைய பாரதூரமான மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான உண்மையான ஆபத்தைக் கொண்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பாக பஞ்சம் கோரியிருக்கும் நபர்களைப் பலவந்தமாக தமது நாடுகளுக்கு அனுப்பி வைப்பதனைத் தவிர்த்துக் கொள்ளல்; மற்றும்

(e) அதன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் செயல்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான பொறுப்புக் கூற வைத்தல் தொடர்பான பணிகளைப் பலப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் தொடர்பான உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கு (**OHCHR**) ஆதரவளித்தல்.

Advance unedited version